During the month of April-May 1967, the project has made arrangements to supply milk in bulk to 421 applicants and a total quantity of 61,911 litres of milk have been supplied to these applicants. No applicant has been denied the supply of milk and in almost all cases the demand has been met with in full.

THIRU K. VINAYAKAM : Whereas we are in the marriage season and plenty of marriages are being celebrated, is it not a fact that taking delivery of milk from the Madhavaram Depot is very difficult and will the Government make arrangements to have it delivered to the consumers at the Nandanam Depot and is it not also a fact that the required quantity is not given and they effect a cut depending upon the supplies received at the Depot ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : Arrangements have been made to supply milk from the nearest milk depots at suitable timings to suit the convenience of the public. The members of the public who require bulk supply for marriages, etc., have to apply to the Assistant Milk Commissioner (Distribution) at Nandanam, Madras-35 specifying the dates and session and quantity of milk required and the depot through which delivery has to be made. But we have prescribed the condition that the entire cost of milk in bulk quantity has to be paid in advance.

DR. H. V. HANDE : Is the Minister aware of the fact that, because a lot of milk is supplied for marriages, etc., ordinary customers are not able to get milk in sufficient quantities ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : It is not correct.

கொள்ளிட நதி வெள்ளம்

*337 வினா.—திரு எஸ். சிவசுப்பிரமணியன் : மதிப்பிற்குரிய உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

சிதம்பரம் தாலுக்காவில் கொள்ளிடம் நதியின் வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்கப்பட்டுக்கொண்டிருக்கும் காட்டூர், கீழ்குண்டலபாடி, நாதல் படுகை போன்ற கிராமத்து மக்களை அந்தக் கிராமங்களிலிருந்து வெளியேற்றி அக்கரைக்குக் கொண்டுவந்து குடியேற்றும் திட்டம் ஏதேனும் பரிசீலனையிலிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இல்லை.

திரு. எஸ். சிவசுப்பிரமணியன் : சார், வருஷாவருஷம் கொள்ளிடத்திலே வெள்ளம் வரும்பொழுதெல்லாம் அந்தப் பகுதி மக்கள் மிகவும் அவஸ்தைப்படுகிறார்கள். இந்தப் பகுதியிலிருந்து அந்தப் பகுதிக்குச் சாப்பாடு அனுப்ப வேண்டுமென்றால், 'போட்'டில்தான் அனுப்ப வேண்டும். ஆகவே, அவர்களைக் கட்டாயமாக அக்கரைக்குக் கொண்டுவர அரசாங்கம் முடிவு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : அரசாங்கம் முடிவு எடுப்பதில் மட்டும் இது இல்லை. அங்கிருக்கிற மக்களே வெளியேற மறுக்கிறார்கள் என்பது கனம் உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் கட்டாயம் என்று வற்புறுத்துகிறார். வெள்ளத்தை எதிர்த்துச் சமாளிப்பதற்கு வேண்டிய திடமான தகுதியை அந்த மக்கள் பெற்றிருப்பார்கள்போல் இருக்கிறது. அவர்களை வெளியேற்றுவது அவர்களுக்கு உடன்பாடாக இல்லை.